குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.1392/2022**

வழக்கு சாட்சிஎ.ம.சா.1

2025ம் நவம்பர் மாதம் 07–ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.Rajendran, Assistant என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபிரகாஷ் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 07.11.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். உடல்நிலை சரியில்லை அதனால் அனுப்பவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு வாங்கிய அன்று எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பு வாங்கிய அன்று எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் இதுநாள் வரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு HDFC bank சங்ககிரி கிளையில் கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. மா.சா.ஆ.1 காசோலையானது என் வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என வாதி குறுக்குவிசாரணையின் போதும் அல்லது எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இன்று தான் முதன்முதலாக காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என நிரூபணம் செய்ய கையெழுத்து நிருபணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கையெழுத்து நிருபணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்யவில்லை என்பதற்கு காரணம் உள்ளதா என்றால் காரணம் இல்லை. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்பதனால் தான் கையெழுத்து நிருபணருக்கு அனுப்ப முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும்போது எனது வங்கி கணக்கில் பணம் இருந்ததா என்றால் இல்லை. வங்கி

கணக்கு முடக்கப்பட்டிருந்தது. நான் கணக்கை முடக்கினேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வரவு செலவு சரியாக செய்யாததனால் account block ல் உள்ளது. நான் தனிப்பட்ட முறையில் எழுத்து மூலமாக எழுதி கொடுத்து கணக்கை account block யை செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போன்று இரண்டு காசோலைகள் காணாமல் போயிருந்தது அது சம்மந்தமாக வங்கியில் Stop payment கொடுத்திருந்தேன் என்று கூறிய நிலையில் நீங்கள் உங்களது வங்கியில் மேற்கண்ட காசோலைகளின் எண்களை கொண்டு குறித்து எழுத்துமூலியமான விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் காசோலை காணாமல் போனது என தெரிந்து வங்கியில் Stop payment தரலாம் என்று கேட்டபோது எனது account block உள்ளதாக வங்கியில் சொன்னார்கள். தற்போது வரை எனது வங்கி கணக்கு block உள்ளது என்றால் சரிதான். account block ல் உள்ளதால் நான் வங்கியில் Stop payment எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் உண்மையை மறைத்து எனது முதல் விசாரணையில் Stop payment கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை காணாமல் போனதாக நான் எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். காணாமல் போன இரண்டு காசோலைகளை மீட்க நான் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனக்கு பைனான்ஸ் இருந்தது என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2018 ல் முடிக்கப்பட்டது. பைனான்ஸ் முடிக்கப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அழிக்கப்பட்டுவிட்டது. பைனான்ஸ் பதிவு செய்ததற்கான பதிவு ஆவணங்களையாவது நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிதி நிறுவனத்தை நடத்தவில்லை,வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஆஜரான பின்னிட்டு காணாமல்போன காசோலையை வைத்து வாதி சட்டவிரேதமாக புகார் அளித்துள்ளார் என்பதால் அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. காசோலை காணாமல் போன விவரம் எப்போது தெரியவந்தது என்றால் 2018 ல் பைனான்ஸ் மூடப்பட்டபோது தெரியவந்தது. கண்ணன் காசோலையை தராமல் உபயோகப்படுததினார் என்பதற்கு அவர்மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் கண்ணன் இறந்துவிட்டதால் எடுக்கவில்லை. கண்ணன் என்பவரின் முகவரி தெரியுமா என்றால் த/பெ.சித்தன், கானியாளம்பட்டி, தேவூர், சங்ககிரி. 2018 ல் எந்த மாதத்தில் பைனான்ஸ் மூடினேன் என்றால் 8 டு 12 ம் மாதத்திற்குள் இருக்கும். கண்ணன் இறந்த தேதி 2018 தெரியும் மாதம் தேதி தெரியவில்லை. கண்ணன் 30.12.2018 ல் தான் இறந்தார் என்றால் சரிதான். காசோலை காணாமல்போனதாகவும் இறந்துபோன நபர் எடுத்துக்கொடுத்துவிட்டார் என தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ன் விசாரணையில் காசோலையில்

குறைபாடு உள்ளது என சொல்லியுள்ளேன். ஆனால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காசோலை தொலையவில்லை என்பதால் தான் இதுவரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளது போல 20.04.2022 ல் நான் வாதியிடம் ரூபாய் 8 லட்சம் வாங்கிக்கொண்டு அதை தீர்ப்பதற்காக காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. அப்போது எனக்கு உடல்நிலை சரியில்லை. நான் என் மனைவியின் பாதுகாப்பில் தான் உள்ளேன் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு பெற்றோர் பாதுகாப்பில் இருந்ததாக சொல்கிறார். கடன் வாங்கிய அன்றும் காசோலை கொடுத்த அன்றும் நான் உடல் நலத்துடன் இருந்தேன் என்றும் தற்போது பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுப்பது என்னுடைய கடமை என்றால் சரியல்ல.

/ Sd /– A.K. Padmapriya
Judicial Magistrate
Kumarapalayam